# தனமல்வில பிரதேச சபை

# மொனறாகலை மாவட்டம்

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 24 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 18 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 16 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர்த்து, தனமல்வில பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 26,974,952 தொகை எனினும் அதனை ரூபா 33,392,086 தொகை என கணித்து ரூபா 6,417,134 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 1,186,533 எனினும் அதனை ரூபா 2,036,892 என கணித்து ரூபா 850,359 தொகையினால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

-----------------------------------------------------------------------------

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களிலன் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 126,617,680 தொகையாகக் காணப்பட்டதுடன் மீதிச் சான்றிதழ்கள் மற்றும் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் மீதி ரூபா 98,082,326 ஆகும்.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------

1995 ஆண்டு முதல் 1999, 2001 முதல் 2005, 2007, 2011 முதல் 2012 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக ரூபா 269,061 இற்கான கணக்காய்வுக் கட்டணத்தினை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந் ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,663,013 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,980,122 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் தேறிய அதிகரிப்பு ரூபா 682,891 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

------------------------------

2.2.1 நிலுவை வருமானம்

------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 39,031,013 இற்கான நிலுவை வருமானத்தினை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 குத்தகை

-------------

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 1980/46 கொண்ட சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்கு சொந்தமான கடைகளின் வாடகையினை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) தனமல்வில பொது மலசலகூடம், கிரி இப்பன் வெவ நாற்றுமேடை வளவு, டங்டும மாட்டிறைச்சிக் கடை மற்றும் தனமல்வில மாட்டிறைச்சிக் கடை ஆகிய சபையின் ஆதனங்கள் மீளாய்வாண்டின் போதும் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.3 ஏனைய வருமானங்கள்

------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கருமங்களுக்காக இலங்கை சுற்றுலா மேம்படுத்தல் அதிகார சபையில் பதிவு செய்துள்ள அல்லது அவ் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சபையின் அதிகார பிரதேசத்தில் நடத்தப்படும் 01 ஹோட்டல் மற்றும் 01 தங்குமிடம் தொடர்பாக குறிப்பிட்ட வருடத்திற்கு முன்னைய வருடத்திற்கான பெறுவனவுகளில் நூற்றிற்கு ஒன்றினை மேற்படாத கட்டணம் ஒன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் அதிகார பிரதேசத்தில் பல்வேறு கம்பனிகளினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 12 செலுத்துகை டவர்களில் இருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த வாடகை ஒன்று அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டியிருந்த தொகை கீழ்வருமாறு,

| | ரூபா |
|---|---|
| | ------- |
| நீதி மன்றத் தண்டப்பணம் | 1,101,333 |
| முத்திரை கட்டணம் | 85,200 |

2.3 மிகை விதிப்புக்கள்

------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 172(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 672,220 இற்கான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

3.1.1 மின்சக்தி அமைச்சு செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 திகதிய கடிதத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் வீதி விளக்குகளை செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக கட்டணம் செலுத்தும் அடிப்படையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் வீதி விளக்குகள் செயற்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்காக சேவை வழங்குனர் ஒருவராக செயற்பட வேண்டும் எனினும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 636,972 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் வீதி விளக்குகள் பொருத்தும் போது

பொருத்தும் முறை, பொருத்தும் விளக்குளின் வகை, எண்ணிக்கை பற்றிய விபரம் என்பன பதிவு செய்திருக்கவில்லை.

3.1.2 உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் 2014 செப்டம்பர் 29 ஆந் திகதிய விண்ணபப்பத்திர இலக்கம் வெட் 41 கடிதத்தின் பிரகாரம் பெறுமதி கூட்டிய வரி செலுத்தத் தவறியமையால் ரூபா 529,582 இற்கான தண்டப்பணம் ஒன்று செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது.

3.1.3 2002, 2005, 2006, 2007, 2009, 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு தாமதித்தமையால் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் 2014 அக்டோபர் 06 திகதிய கடிதத்தின் பிரகாரம் ரூபா 16,678 தொகை ஒன்று செலுத்த நேரிட்டிருந்தது.

3.1.4 மீளாய்வாண்டின் போது அமைய மற்றும் பிரதியீட்டு அடிப்படையில் நூலக உதவியாளர், முன்பள்ளி பெண் மேற்பார்வையாளர், தொழில் நுட்ப உதவியாளர், இயந்திர இயக்குனர், சாரதிகள், அலுவலக உதவியாளர், தொழிலாளர்கள், காவலாளிகள் ஆகிய பதவிகளுக்காக ஆட்கள் சேர்க்கப்பட்டிருந்த 20 ஊழியர்களை மீளாய்வாண்டு அக்டோபர் 24 திகதி நிரந்தர சேவைக்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அவர்கள் அடங்கியிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது அதற்காக சம்பளம், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என ரூபா 4,130,714 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.2 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 19(1)(i) ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூலமாக பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது பல்வேறு பதவிகளுக்கு 11 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு சம்பளங்கள், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியமாக ரூபா 649,904 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XIV பிரிவு 4 மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக சபையின் கூட்டங்களுக்கு சமூகமளித்ததற்காக இணைந்த படிகளாக 16 மந்திரிமாருக்கு ரூபா 67,440 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்